**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் 01.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5013/H/2024**

திரு ச.ரமணகாந்தன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்
மண்டலம் 2 — பொது அதிகார அமைப்பு
வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம்.

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 09.02.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் மக்களுடன் முதல்வர் திட்ட மனு எண்கள்.6697005, 6696074, 6697429 மற்றும் 6696452 ஆகியவற்றின் நகல்கள், அம்மனுக்கள் மீது இது நாள் வரை மேற்கொண்ட நடவடிக்கையின் நகல்கள் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 12.04.204 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு ச.ரமணகாந்தன் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு. G. அமர்நாத், கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## ஆணை

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 25.07.2024, 26.09.2024 மற்றும் 10.11.2025 தேதியிட்டக் கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் பொது தகவல் அலுவலர் கால தாமதமாக தகவல் வழங்கியதாகவும் அதனால் தான் மன உளைச்சலுக்கு ஆளாகியதாகவும் தெரிவித்தார். மேலும், தனது மனுவில் சர்வே எண்.158 மற்றும் 344ல் ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர் நிலைகள், தூர்வார கோரியதாகவும், பொது தகவல் அலுவலர் அவர்கள் 10.11.2025 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக, சர்வே எண்.390ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு விவரங்களை அறிக்கையாக சமர்ப்பிக்க கோரி, வட்டாட்சியர், வேலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அறிக்கை பெற்ற பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தவறான சர்வே எண்ணை குறிப்பிட்டு தகவலை வழங்கியுள்ளார் எனவும், இது நாள் வரை ஆக்கிரமிப்பினை அகற்றும் பணி நடைபெறவில்லை எனவும் தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- சட்டப்பிரிவு 7ன்படி மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பத்தை பெற்ற பொது தகவல் அலுவலர் அவர்கள் 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும், காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கும் அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று இவ்வாணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.

- மேலும், மனுதாரர் இன்றைய விசாரணையின் போது தெரிவித்த சர்வே எண் முரண்பாடு சம்மந்தமாக, மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணிற்குரிய ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து நடவடிக்கை மேற்கொண்டு அந்த நடவடிக்கை விவரத்தினை பற்றிய முழுமையான தகவல்களை, மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின்

நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக ஆணையத்திற்கு 04.08.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது. தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 5013/H/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்
மண்டலம் 2
வேலூர் மாநகராட்சி
வேலூர் மாவட்டம்.

மேல்முறையீட்டாளர்

திரு ச.ரமணகாந்தன்
த/பெ. (லேட்) சி.சண்முகம்
422/2 பேங்க்மேன் காலனி
அலமேலுமங்காபுரம்
வேலூர் 9.

Copy to : File
VM/PA